

Botanical Name : **Evolvulus alsinoides**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herbs** |
| தமிழ் பெயர் | : | விஷ்ணுகிரந்தி |
| Hindi Name | : | Visnukrantha |
| Part Used | : | Whole Plant |
| Uses | : | Chronic Bronchitis, General Weakness<br>நுரையீரல் நோய்கள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Natural Source |
| Duration of Crop | : | 3 Months |
| Grown Area | : | Distribution is common all the districts of Tamil nadu - Wild Source |

**விஷ்ணு கிரந்தி :** விஷ்ணு கிரந்திக்கு கொடிய சுரத்தாற் பிறந்த ஜயம், உட்சூடு, கோழை, இருமல், வளி நோய்கள் ஆகியவை தீரும். இதன் பூண்டைக் குடிநீரிட்டு கொடுத்து வர, மேற்கண்ட நோய்கள் தீரும். விஷ்ணு கிரந்தி பொடியை இளவெந்நீருடன் சேர்த்து குடித்துவரின், பிள்ளைப் பேரு உண்டாகும். இதன் பூண்டுடன் சீரகம் சேர்த்து அரைத்து பாலில் கலக்கி உட்கொள்ள, சுரம், நரம்பு தளர்ச்சி நீங்கும். இப்பூண்டோடு துளசியும் சேர்த்து குடிநீரிட்டு உண்டு வர செரியாமை, கழிச்சலோடுங் கூடிய சுரம் நீங்கும்.



Botanical Name : **Feronia limonia**

| | | |
|---|---|---|
| Habit | : | **Trees** |
| தமிழ் பெயர் | : | விளாம்பழம் |
| Hindi Name | : | Kavat, Kavitha |
| Part Used | : | Leaves, Fruits |
| Uses | : | Carminative, Tonic<br>வயிற்றுப் பொறுமல் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 6 Mts. X 6 Mts. |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Distribution is common all the districts of Tamil nadu - Wild Source |

**விளாம்பழம் :** இஃது ஈளை, இருமல், கோழை, வெப்பத்தாலுண்டான நீர்வேட்கை இவைகளை போக்கும். அன்றியும் பசியை உண்டாக்கும். உடற்கு நன்மை செய்யும். காயை ஓடு நீங்கி தனியாக வேணும். வில்வப் பழத்தோடு சேர்த்தேனும் கழிச்சல் உள்ளவர்களுக்கு கொடுக்க, நன்மை உண்டாக்கும். காலையில் பச்சடி செய்து சாப்பிடுவது இந்தியர்களின் வழக்கம் இதனால் வாய்ப்புண், உள்ளழலை மாற்றும் பழத்தின் ஓட்டை நீக்கி பழத்தை மாத்திரம் சாப்பிட வாய்நீர் ஊறத் தொண்டைப்புண் , பல்லீற்றுப்புண்கள் போகும். பசித்தீ உண்டாகும். பழச்சதையுடன் திப்பிலிச் சூரணம் சேர்த்து மேல்முச்சு, விக்கல் இவைகளுக்கு கொடுக்கலாம். இப்பழத்தின் மணப்பாகு, தீ (பித்த) நோய்களைப் போக்கும்.



Botanical Name : **Ficus benghalensis**

| | | |
|---|---|---|
| Habit | : | **Trees** |
| தமிழ் பெயர் | : | ஆலமரம் |
| Hindi Name | : | Vat |
| Part Used | : | Latex, Bark, Fruits, Leaves, Roots and Buds |
| Uses | : | Local Inflammations, Darkening of Face and Around Eyes<br>**வீக்கமுருக்கி, கண் கருவளையம் நீக்கி** |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 6 Mts. X 6 Mts. |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Distribution is common all the districts of Tamil nadu - Wild Source |

**ஆலமரம் :** அருகம்பட்டைச் சமூலத்தைப் பொடித்த சூரணம் செய்து அதற்கெனவே குறிக்கப்பட்ட அளவிற்கேற்ப, ஆலம்பாலைச் சேர்த்து, ஆறிப் போகாதவாறு முன்சொன்ன சூரணத்திற்குச் சரியாய், கற்ப முறைப்படி ஒரு மண்டலம் (48 நாட்கள்) தவறாமல் பத்தியத்துடன் உண்ணில். வெண்குட்டம், சோகை முதலிய பிணிகள் ஓடிப்போகும். விழுதை கொண்டு பல்துலக்க, பல் இறுகும். இதை குடிநீரிட்டு, பாலுடன் சேர்த்து கொடுக்க, வெள்ளை படுதல் நீங்கும். இதை பால், சர்க்கரை முதலியவற்றோடு சேர்த்து, வயிற்றுளைவுக்கு கொடுக்கலாம். இதனால் பல் துலக்கி வர, பல் நோய், பல் ஈறிலிருந்து குருதி வடிதல் முதலியவை நீங்கி, பல் உறுதிப்படும்.



Botanical Name : **Garcinia indica**

Habit : **Trees**

தமிழ் பெயர் : கொடம்புளி

Hindi Name : Kokum

Part Used : Fruit

Uses : Indigestion

வாத நோய்கள், அஜீரண கோளாறுகள்

Propagation Planting Material by : Seeds

Espacement : 6 Mts. X 6 Mts.

Duration of Crop : 1 Year / Perennial Source

Grown Area : Courtrallum Forest area.

Natural Source available in South Tamil Nadu

**கொடம்புளி :** உணவில் சேர்த்துக் கொள்ள உடல் பருமனை குறைக்கும்.



Botanical Name : **Gmelina arborea**

| | | |
|---|---|---|
| Habit | : | **Trees** |
| தமிழ் பெயர் | : | பெருங்குமிழ் |
| Hindi Name | : | Gambarri |
| Part Used | : | Roots |
| Uses | : | Indigestion<br>அஜீரணக் கோளாறுகள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 6 Mts. X 6 Mts. |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Eastern Ghats & Western Ghats of Tamil Nadu |

**குமிழ மரம் :** இப்பழத்தை நசுக்கி நீர் சேர்த்து கசாயமிட்டு, அத்துடன் சமபாகம் எள் எண்ணெய், பசுவின் பால் சேர்த்து கலக்கி, அதில் கிச்சிலிக்கிழங்கு, கசகசா, கார்போகஅரிசி, காட்டுச்சீரகம், கருஞ்சீரகம் இவைகளைத் தயில முறைக்குரிய அளவு எடுத்துப் பசுவின்பால் விட்டரைத்துக் கலக்கி, சிறு தீயில் எரித்து, பக்குவ பாகத்தில் வடித்து, வாரத்திற்கு இருமுறை தலையிலிட்டு மூழ்கிவர, உடல் வறட்சி நீங்கி உடல் பலம் பெறுவதுடன், தலையிலுண்டாகும் பொடுகு நீங்கும்.



Botanical Name : **Gmelina asiatica**

| | | |
|---|---|---|
| Habit | : | **Shrub** |
| தமிழ் பெயர் | : | நிலக்குமிழ் |
| Hindi Name | : | Badhara |
| Part Used | : | Fruits |
| Uses | : | Gonorrhoea, Dysuria<br>பால்வினை நோய்கள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 4 Mts. X 4 Mts. |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Distribution is common all the districts of Tamil nadu - Wild Source |

**நிலக்குமிழ் :** இதன் இலையும் தளிரும் கனத்துக் குழகுழப்பாயுள்ளதால், நீரில் சேர்த்து அலச நீரும் குழகுழப்புத் தன்மையடையும். இதைக் கொடுத்து வர வெட்டை, நீர்ப்பைத்தாபிதம், நீர்க்கடுப்பு நீங்கும். இதன் வேரை அரைத்துக் கொடுத்து வர கழிச்சல், முதலியன போகும். மேலும் இது கீல்வாயு, கவுட்டு வீக்கம், வெள்ளை இவைகளையும் போக்கும்.



Botanical Name : **Helicteres isora**

| | | |
|---|---|---|
| Habit | : | **Shrub** |
| தமிழ் பெயர் | : | வலம்புரி |
| Hindi Name | : | Marophali, Marori |
| Part Used | : | Roots, Bark, Fruits |
| Uses | : | Vermifuge, Wounds, Epistaxis<br>புழுக்கொல்லி, புண்கள் ஆற |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Natural Source |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Distribution is common all the districts of Tamil nadu - Wild Source |

**வலம்புரிக்காய் :** காயை எண்ணெயிலிட்டுக் காய்ச்சி வடிகட்டி, காதில் 4,5 துளிவிட்டு, பஞ்சிட்டடைக்க, காதடைப்பு, காதுகுத்தல் முதலியன நீங்கும். இதைப் பொடி செய்து தினமொன்றுக்கு 2,3 முறையாக 4-8 கிராம் வீதம் கொடுத்துவர இருமலில் நேரிடும், கேவல், விக்கல், மேகம், ஐயசுரம், கூன்விழல் நீங்கும்.




Botanical Name : **Heliotropium indicum**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herbs** |
| தமிழ் பெயர் | : | தேள்கொடுக்குப் பூண்டு |
| Hindi Name | : | Hatta-Juri |
| Part Used | : | Whole Plant |
| Uses | : | Wounds, Scorpion Stings, Asthma, Chest Affections<br>புண்கள், தேள்கடி, நுரையீரல் நோய்கள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Natural Source |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Distribution is common all the districts of Tamil nadu - Wild Source |

**தேள்கொடுக்கு : பெருந்தேள்கொடுக்கு :** இதன் இலையை அரைத்து பூசிவர, சொரி – சிரங்கு, கரப்பான், புண், காயப்பட்ட புண், கொறுக்குப்புண், ஈறுகட்டல், முகப்பரு இவை குணப்படும். இலையை அரைத்து 1–3 வராகன் உட்கொள்ள சுரம் விலகும். இலையையும், பூவையும் குடிநீராய்ச் செய்து வாய் கொப்பளித்து வர தொண்டைப்புண், தொண்டை இறுக்கம், தொண்டையிற்காணும் வலி நீங்கும். இலைச்சாற்றைக் காதிற் பிழிய சீவடிவதும், கண்ணிலிடக் கண் சிவத்தலும் நீங்கும்.தேள் கொட்டிய் நஞ்சு நீங்க, கொட்டிய வாயில் இலைச்சாற்றைப் பூசலாம். இதன் காயை குடிநீரிட்டு கொடுக்க இரைப்பு தணியும்.



Botanical Name : **Hemidesmus indicus**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herbs** |
| தமிழ் பெயர் | : | நன்னாரி |
| Hindi Name | : | Salsa |
| Part Used | : | Roots |
| Uses | : | Diuretic, Blood Purifier, Refrigerant<br>சிறுநீர் பெருக்கி, இரத்த சுத்தி, குளிர்ச்சியுண்டாக்கி |

Propagation Planting Material by : Stem Cutting

| | | |
|---|---|---|
| Espacement | : | 45 CM X 45 CM |
| Duration of Crop | : | 6 Months |
| Grown Area | : | Distribution is common all the districts of Tamil nadu - Wild Source |

**நன்னாரி :** நன்னாரியின் வேர், இலை, கொடி, காய் பூ இவைகளை நெய்யுடனே வதக்கி வறுத்துக்கொண்டு, சிறுபுளி, மிளகு, உப்பு இட்டு துவையல், வடகம் முதலியவைகளாக பாகம் செய்து கொண்டு ஒரு மண்டலம் வரை பத்தியத்துடன் உட்கொண்டு வர அக்குள் நாற்றம், வியர்வை முதலியவை அகலும். வேரை உலர்த்தி பொடித்துப் பசுவின் பால் சேர்த்து நீர்ச்சுருக்கு முதலிய வெப்ப நோய்களுக்கு கொடுக்கலாம். மேற்படி நோய்களுக்கு நன்னாரி வேர், சீரகம் முதலிய சேர்த்த குடிநீரிட்டும் கொடுக்கலாம். நன்னாரியை வாழை இலையில் சுற்றிக்கட்ட, சாம்பலில் புதைத்து வைத்து எடுத்து நரம்பு நீக்கி அத்துடன் வெல்லம், சீரகம் சேர்த்தரைத்து கொடுக்க நீர் எரிச்சல் நீங்கும். இதை கற்றாழைச் சாற்றுடன் கலந்துண்ண வண்டுகடி போகும்.



Botanical Name : **Holarrhena antidysenterica**

| | | |
|---|---|---|
| Habit | : | **Trees** |
| தமிழ் பெயர் | : | குடசப்பாலை |
| Hindi Name | : | Kurchi |
| Part Used | : | Bark, Seeds |
| Uses | : | Carminative<br>அகட்டுவாய்வகற்றி |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 6 Mts. X 6 Mts. |
| Duration of Crop | : | 1 Year / Perennial Source |
| Grown Area | : | Eastern Ghats & Western Ghats of Tamil Nadu |

**குடசப்பாலை :** பட்டையை முறைப்படி குடிநீரிட்டு 15 மி.லி. - 30 மி.லி. வரை தினம் மூன்று வேளை கொடுத்து வர, கழிச்சல் வகை யாவும் போகும். பட்டையைக் குடிநீரிட்டு வாய் கொப்பளித்துவர பல்வலி தீரும். பட்டைச் சாற்றை எண்ணெயிலிட்டுக் காய்ச்சி, கரப்பான், சொரி - சிரங்கு முதலிய நோய்களுக்கு தடவ நன்மை தரும். பட்டையை சிதைத்து வலியுள்ள இடங்களில் வைத்து கட்ட நன்மை பயக்கும். பட்டை 8 கிராம், வில்வபழச் சதை 8 கிராம், மாதுளம் பட்டை 4 கிராம், எடை இம்மூன்றையும் உலர்த்தி பொடி செய்து 1கி - 2கி எடை விகிதம் தேனில் அல்லது சர்க்கரையில் கலந்து கொடுக்க கழிச்சல் போகும்.



Botanical Name : **Holostemma ada-kodian**

| | | |
|---|---|---|
| Habit | : | **Climber** |
| தமிழ் பெயர் | : | அடபொதியன்கிழங்கு |
| Hindi Name | : | Jivanti |
| Part Used | : | Roots |
| Uses | : | Fever, Arthritis, Cough<br>சுரம், மூட்டுவலி, நுரையீரல் நோய்கள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Natural Source |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Eastern Ghats & Western Ghats of Tamil Nadu |



Botanical Name : **Hybanthus enneaspermus**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herbs** |
| தமிழ் பெயர் | : | ஓரிதழ்தாமரை |
| Hindi Name | : | Ratna Purush |
| Part Used | : | Whole Plant |
| Uses | : | Aphrodisiac<br>ஆண்மை பெருக்கி |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Natural Source |
| Duration of Crop | : | 3 Months |
| Grown Area | : | Distribution is common all the districts of Tamil nadu - Wild Source |

**ஓரிதழ் தாமரை :** ஓரிதழ்த் தாமரை சமூலம், பச்சை கற்பூரம், கோரோசனை இவற்றைப் பசுவினது நெய்யுடன் கலந்து மேலுக்கு பூசி வர மேகவெட்டை, புண், மண்டை நோய்கள் முதலியன நீங்கும். இதனை காலையில் காயகல்பமாக சாப்பிட, உடலை வலுக்கச் செய்யும்.



Botanical Name : **Indigofera tinctoria**

| | | |
|---|---|---|
| Habit | : | **Shrub** |
| தமிழ் பெயர் | : | அவுரி, நீலி |
| Hindi Name | : | Neel |
| Part Used | : | Seed Oil, Roots, Leaf Juice |
| Uses | : | Bronchitis, Asthma, Rheumatism<br>நுரையீரல் சம்பந்தமான நோய்கள், வாத நோய்கள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 1 Feet X 1 Feet |
| Duration of Crop | : | 5 Months |
| Grown Area | : | Cultivated in Kancheepuram, Salem & Cuddalore Dist. |

**அவுரி :** அவுரி வேரைக் குடிநீர் செய்து கொடுக்க குன்ம நோய், வெள்ளை, சுரமூர்ச்சை நோய் நீங்கும். எல்லா விடங்களையும் முறிக்கும். இதன் இலையை குடிநீர் செய்து கொடுக்க நஞ்சு, வளி சுரம், முப்பிணி, காமாலை, மாந்தம், கீல்வாதம் நீங்கும். அவுரி இலை, வேர்பட்டை பொரித்த பெருங்காயம் மிளகு இவைகளை ஓரெடை தூக்கி, நன்றாக அரைத்து, சுண்டையளவு செய்து நாள் ஒன்றுக்கு, காலை ஒன்று, மாலை ஒன்றாக கொடுத்து, உப்பில்லாப் பத்தியம் வைக்க, நரம்பு சிலந்தி குணமாகும். 3-5 நாள் வரை கொடுக்கலாம். இதையே நரம்பு சிலந்தி தோன்றிய இடத்தில் வைத்துக்கட்டலாம்.



Botanical Name : **Kaempferia galanga**

Habit : **Herbs**

தமிழ் பெயர் : கிச்சிலிக்கிழங்கு

Hindi Name : Sidhoul

Part Used : Rhizomes, Root Stock, Leaves

Uses : Aromatic

மணமூட்டி

Propagation Planting Material by : Tubers

Espacement : 1 Feet X 1 Feet

Duration of Crop : 9 Months

Grown Area : Only in Nurseries of Certain Institutions

**கிச்சிலி கிழங்கு :** கிச்சிலி கிழங்குடன், திப்பிலி, இலவங்கம், அதிமதுரம் சேர்த்தக் குடிநீரிட்டு இதில் கற்கண்டு அல்லது தேன் சேர்த்து கொடுக்க இருமல் தணியும். உலர்ந்த கிழங்கை தேய்த்து குளிப்பதுண்டு, வளி ஐய நோய்களுக்குச் செய்யும் எண்ணெய்களில் இது சேருவதுண்டு.



Botanical Name : **Lawsonia inermis**

| | | |
|---|---|---|
| Habit | : | **Shrub** |
| தமிழ் பெயர் | : | மருதாணி |
| Hindi Name | : | Henna, Mehndi |
| Part Used | : | Bark, Leaves, Flowers and Seed |
| Uses | : | Hair Tonic, Skin Infection<br>குளிர்ச்சியுண்டாக்கி, தோல் நோய்கள் |

Propagation Planting Material by : Cuttings / Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 1 Mtr. X 1 Mtr., Fence Craft |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Distribution is common all the districts of Tamil nadu - Wild Source |

**அழவணம் (மருதாணி) :** அழவணயிலைப் புளித்த காடியேனும், எலுமிச்சஞ் சாறேனும் விட்டு அரைத்து பூச கீழ்வாயு, குடைச்சல், தலை நோய், கை-கால் வலி, எரிச்சல் போகும். இலையை உள்ளங்காலில் தேய்த்தால் கால் எரிச்சல் போகும். நகப்புண், புண், சுளுக்கு இவை -களுக்கு இலையைச் சதைத்துக் கட்டக் குணமுண்டாகும். இலையை அரைத்து கட்ட கண்வேக்காடு குணப்படும். அம்மை போட்ட காலத்தில் கண்களுக்கு அம்மையால் யாதொரு தீங்கும் நேரிடாதவாறு பாதுகாக்க இலையை அரைத்து இருகாலடிகளில் வைத்துக் கட்டலாம். இலையை அரைத்து நகங்களுக்கு நகம் சிவக்கும். இதனால் நகம் யாதொரு நோய்க்கும் உட்படாமல் தடுக்கும். 6 கிராம் எடை இலையை எடுத்து, பூண்டுத்திரி ஒன்று மிளகு ஐந்தும் சேர்த்து அரைத்துக் காலையில் மாத்திரம் 3-5 நாள் வரை கொடுத்து உப்பிலாப்பத்தியம் வைக்க மேகத் தழும்புகள் நீங்கும். இதன் ஊறள் கசாயம், சுளுக்கு, தாபிதம், சிறு காயங்கள் இவற்றிக்கு ஒற்றடங்கொடுக்கலாம். இவற்றை கழுவவும், வாய்புண்ணுக்குக் கொப்புளிக்கவும், வெள்ளைக்குச் பீச்சு செய்யவும் உதவும். இலைச்சாற்றில் அரை உச்சிகரண்டி யளவை 90 மி.லி. பாலுடன் கலந்து கொடுக்க, கைகால் வலி நீங்கும் நீரில் 4 கி. எடை சர்க்கரை கலந்து கொடுக்க வெந்நீர் (சுக்கிலம்) பெருகும். பூவை இராக்காலங்களில் தலையணையின் கீழ் வைத்துப் படுக்க நித்திரை யுண்டாகும். உடல் வெப்பம்மாறும்.



Botanical Name : **Lucas aspera**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herbs** |
| தமிழ் பெயர் | : | தும்பை |
| Hindi Name | : | Goma Madhupati |
| Part Used | : | Leaves, Flowers, Roots |
| Uses | : | Asthma, Wounds<br>நுரையீரல் நோய்கள், புண்கள் |
| Propagation Planting Material by | : | Seeds |
| Espacement | : | Natural Source |
| Duration of Crop | : | 9 Months |
| Grown Area | : | Distribution is common all the districts of Tamil nadu - Wild Source |

**தும்பை :** நல்ல தும்பையிலையைப் பாகப்படி சமையல் செய்து உண்ணின் ஐய நோய்கள் நீங்கும். இது தீர ஐய பணியையும், மருத்துவர்கட்கும் அடங்கா முப்பிணி (சன்னி) களையும் துரத்தியடிக்கும். இதன் இலை சாற்றை மூக்கில் பிழியில் சளியைக் கரைத்து வெளிப்படுத்தும், உடற்கு ஊட்டந்தரும், ஆயினும் உடலிற்கு வெப்பத்தை உண்டாக்கும். பாம்பு கடி நஞ்சாலுண்டான மூர்ச்சையினின்றும் உணர்ச்சி பெற இதன் பூ ரசத்தை மூக்கில் பிழிந்து விடுவதுண்டு. இதன் பின் இலையை உள்ளுக்குக் கொடுத்து, இச்சாற்றைக் கடிவாயிலும் விட நஞ்சு நீங்கும். இதன் பூவை சாறு கொடுக்க, நீர்க்கோவை நீங்கும். தீராத் தலைவலிக்குப் பூவின் சாற்றை இரண்டு துளி மூக்கிலிடலாம். முப்பிணிக்கு இதன் பூவை முலைப்பாலில் ஊறவைத்துக் கண்களிற் பிழியலாம். இப்பூவை எண்ணெயிலிட்டுக் காய்ச்சித் தலை முழுகிவர தலைபளு, ஒற்றை தலைவலி, நீரேற்றம், மூக்கடைப்பு நீங்கும்.



Botanical Name : **Mangifera indica**

| | | |
|---|---|---|
| Habit | : | **Trees** |
| தமிழ் பெயர் | : | மாமரம் |
| Hindi Name | : | Aam |
| Part Used | : | Roots, Bark, Leaves, Flowers, Fruits, Seed Kernal |
| Uses | : | Uterine Tonic<br>கர்பப்பை கோளாறுகளை சரிசெய்ய |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 6 Mts. X 6 Mts. |
| Duration of Crop | : | Annual |
| Grown Area | : | Distribution is common all the districts of Tamil nadu - Wild Source |

**மாமரம் :** மாவிலை கொழுந்து உலர்த்தி பொடித்து மூவிரளவு நீரிழிவுற்குப் கொடுக்கலாம். இலையை தேன் விட்டு வதக்கி குடிநீர் இட்டுத் தொண்டைக்கட்ட, குரற்கம்மல் முதலியவற்றிற்கு கொடுக்கலாம். இலையைத் தீயிலிட அதிலிருந்து வரும் புகை, தொண்டைக் கம்மலை நீக்குவதோடு விக்கலை நிறுத்தும். இலையை சுட்டுச் சாம்பலாக்கி வெண்ணெயில் குழைத்து தீப்புண் வேக்காடு முதலியவைகளுக்குப் போடலாம். பூவை உலர்த்திக் குடிநீரிட்டு, கழிச்சல் நாட்பட்ட சீதக்கழிச்சலுக்கு கொடுக்கலாம். பூவை உலர்த்திப் பொடியை புகையிட கொசுக்கள் ஓடிவிடும்.



Botanical Name : **Maranta arundinacea**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | அரோரூட்டிக்கிழங்கு |
| Hindi Name | : | Tikhor, Tikkor |
| Part Used | : | Underground Rhizomes |
| Uses | : | Dysentery, Diarrhoea, Bronchitis, Cough<br>வயிற்று நோய்கள், நுரையீரல் நோய்கள் |

Propagation Planting Material by : Tuber / Saplings

| | | |
|---|---|---|
| Espacement | : | 2 Feet X 2 Feet |
| Duration of Crop | : | 9 Months |
| Grown Area | : | Only in Nursery Development in Certain Institute & Some Public Garden & Forest Nursery |

**கூவைக்கிழங்கு :** மாவு 1 பங்கு, நீர் 30 பங்கு சேர்த்து கலக்கிக் கொதிக்க வைத்துக் கிளறிக் கொண்டே -யிருந்து, பதத்தில் எடுத்த இக்கஞ்சியைச் சீதபேதியுடைவர்க்கும், சிறுநீர் நோயுற்றவர்களுக்கும் கொடுக்கலாம்.



Botanical Name : **Melia azadirachta**

| | | |
|---|---|---|
| Habit | : | **Tree** |
| தமிழ் பெயர் | : | மலைவேம்பு |
| Hindi Name | : | Bakayan, Mahanimb |
| Part Used | : | Roots, Leaves, Bark, Flowers, Seed |
| Uses | : | Antifever Activities<br>விஷசுர நோய்கள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 6 Mts. X 6 Mts. |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Distribution is common all the districts of Tamil nadu - Wild Source |

**மலை வேம்பு :** இலைச் சாற்றில் தக்க அளவு கொடுத்து வர, புழுக்களைக் கொன்று வெளிப்படுத்தும். இலை அல்லது பூவை களி கிளறி தலைக்குப் பற்றிட வாதத் தலைவலியும், கிளைக்கின்ற புண்களின் மீது தடவி வர, அவைகளும் நீங்கும். பேன் உள்ள தலையில் அப்பி வர, பேன்கள் செத்து விழும். மண்டைச் சொறியும் போகும். வேர் பட்டையை உலர்த்திப் பொடி செய்து 5-12 வயதுள்ள சிறுவர்களுக்கு 2-5 கிராம் வீதம், காலை மாலை கொடுத்தவர வயிற்றுப் புழுக்களைக் கொன்று வெளிப்படுத்தும். 4 முதல் 6 கிராம் எடை வீதம் கொடுக்க, வெறி, சூதக வயிற்றுவலி நீங்கும். பிசினைத் தக்க அளவில் கொள்ளக் கருங்கரப்பான், மேகக்கட்டி, செரியாக்கழிச்சல், மண்ணீரல் வீக்கம் குணமாகும்.



Botanical Name : **Mesua ferrea**

| | | |
|---|---|---|
| Habit | : | **Trees** |
| தமிழ் பெயர் | : | சிறுநாகப்பூ |
| Hindi Name | : | Gajapushpam |
| Part Used | : | Flower Buds |
| Uses | : | Carminative, Tonic<br>அகட்டுவாய்வகற்றி, உடல் உரமாக்கி |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 6 Mts. X 6 Mts. |
| Duration of Crop | : | 1 Year / Perennial Source |
| Grown Area | : | Eastern Ghats & Western Ghats of Tamil Nadu |

**சிறுநாகப்பூ :** இலையை புற்கை செய்து தலையில் வைத்துக்கட்டக் குளிர்ச்சி தரும். இலையை அரைத்து, புண் கொப்புளம் இவைகளுக்குப் போடலாம். இலையைக் குடிநீர் செய்து கொடுக்க விரல் காலடி இவைகளில் உண்டாகும் எரிச்சல் போகும். பூவை பச்சையாக அரைத்து வெண்ணெய் கற்கண்டுடன் கூட்டி உண்டு வர குருதிபோக்கை அடக்கும். உலர்ந்த பூவை நெய் விட்டு அரைத்து, கால்களில் காணும் எரிச்சலுக்குப் பூசி வரலாம். பட்டையை ஊறல் குடிநீர் செய்து உட்கொண்டுவர, உடல் வலுக்கும்.